

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் ரெட்டாக்குறிச்சி ஊராட்சியில் (RO WATER) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தார்.உடன் மங்களூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அடரி.த. சின்னசாமி தெற்கு ஒன்றிய செயலாளர் பா. செங்குட்டுவன் , கே.என்.டி.சங்கர், மாங்குளம் வெங்கடேசன், க. இராமதாஸ், புகழேந்தி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர்

# டாக்டர் எஸ்.ஜே.கயஸ் மறைவு!

## கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, பிப். 13 –


தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ்.ஜே.கயஸ் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்து அன்னாரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கழகத் தலைவர் , முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு :

தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ்.ஜே. கயஸ் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2026 புதன்கிழமை) மாலை இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து வருந்துகிறேன்.

அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் நாட்டுப் படகு மீனவர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் , முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்த்தாய் வாழ்த்து!



"மகளிர் உரிமைத் தொகை"

"மகளிர் விடியல் பயணம்"

"புதுமைப்பெண் திட்டம்"

"தாயுமானவர் திட்டம்"

"நான் முதல்வன் திட்டம்"

"காலை உணவுத் திட்டம்"

இன்னும்

இன்னுமாக

எண்ணில்லா திட்டங்களால்

எளிய மக்களின் இன்னல் தீர்த்து

இந்தியாவின்

தலை சிறந்த மாநிலமாக

தமிழ்நாட்டை

தலைநிமிரச் செய்திருக்கும்

'திராவிட மாடல்' நாயகர்

முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலினின்

ஓய்வற்ற உழைப்புக்கு

ஒப்பற்ற தொண்டூழியத்திற்கு

தமிழ்நாட்டு மக்கள் செலுத்தும்

நன்றிக் காணிக்கையாக

பாராட்டுப் பதக்கமாக

இருக்கப் போகிறது

2026-சட்டமன்றத் தேர்தலில்

இருநூறு தொகுதிகளையும்
கடந்து

திமுக ஈட்டவிருக்கும் இமாலய
வெற்றி..

ஆம்

**"வேண்டும்**

**ஸ்டாலின்**

**மீண்டும்**

**ஸ்டாலின்"**

என்பதே

ஏப்ரல் மாதத்து

ஓட்டுப்பதிவு எந்திரங்களின்

தமிழ்த்தாய்

வாழ்த்தாக

இருக்கப்

போகிறது...

**என்னநாஞ் சொல்றது!**

**மருது. அழகுராஜ்**
கழக செய்தித்
தொடர்புக்குழு துணைத்
தலைவர்



அமெரிக்காவின் வரி விதிப்பு காரணமாக

# இந்தியா - ஈரான் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, பிப். 13 -

அமெரிக்கா வரிவிதிப்பு காரணமாக இந்தியா ஈரான் வர்த்தகம் பாதிக்குமா? என்றும் சபாஹர் துறை முகத்தில் இந்தியாவின் பங்கு குறித்தும் மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

இந்தியாவும் ஈரானும் குறிப்பிடத்தக்க வர்த்தக உறவைப் பகிர்ந்து கொள்கின்றனவா? 2025-26 நிதியாண்டில் இருதரப்பு வர்த்தகம் $2 பில்லியனை எட்டியுள்ளதா, முக்கிய ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் மற்றும் சாபஹர் துறைமுகம் மற்றும் INSTC போன்ற மூலோபாயத் திட்டங்களால் இயக்கப்படுகிறதா?

இந்தியா சபாஹர் துறைமுகத்தில் $500 மில்லியன் முதலீடு செய்திருக்கிறதா? சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து வழித்தடத்தை சார்ந்து ஈரான் வழியாக ரஷ்யா மற்றும் ஐரோப்பாவுடன் இந்தியாவை இணைக்கிறதா? பாரம்பரிய கடல்வழிப் பாதைகளுடன் ஒப்பிடும் போது போக்குவரத்து நேரங்கள் மற்றும் செலவுகளைக் குறைக்கிறது மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25% வரி விதிப்பது ஈரானுடனான இந்தியாவின் வர்த்தகச் சமன்பாட்டை மோசமாகப் பாதிக்குமா?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

பதில் :

அதற்கு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

நடப்பு நிதியாண்டில் (ஏப்ரல்டிசம்பர், 2025), ஈரானுடனான இந்தியாவின் மொத்த வர்த்தக வர்த்தகம் USD 1,145.29 மில்லியனாக இருந்தது, இதில் USD 883.10 மில்லியன் ஏற்றுமதியும் 262.19 மில்லியன் டாலர் இறக்குமதியும் அடங்கும். இந்தியாவின் வர்த்தகம் பெரும்பாலும் மனிதாபிமான இயல்புடையது, விவசாய பொருட்கள் மற்றும் மருந்துகளை உள்ளடக்கியது. ஏப்ரல்நவம்பர் 2025 காலப்பகுதியில், உருப்படி வாரியாக மற்றும் மதிப்பு வாரியாக, ஈரானுடனான இந்தியாவின் சரக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விவரங்களை பின்வரும் இணையத்தில் அணுகலாம்:

https://tradestat.commerce.gov.in/meidb/country_wise_all_commodities_export

https://tradestat.commerce.gov.in/meidb/country_wise_all_commodities_import

ஆப்கானிஸ்தானின் புனரமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், மத்திய ஆசியாவுடனான வர்த்தகம் மற்றும் பொருளாதார தொடர்புகளை மேம்படுத்துவதற்காகவும் ஆப்கானிஸ்தானுக்கு மிகவும் தேவையான இணைப்பை வழங்குவதற்காக சபாஹர் துறைமுக திட்டம் கருத்தாக்கப்பட்டது. இந்தியா போர்ட்ஸ் குளோபல் லிமிடெட் (ஐபிஜிஎல்) என்ற இந்திய நிறுவனமானது, அதன் முழுச் சொந்தமான துணை நிறுவனமான இந்தியா போர்ட்ஸ் குளோபல் சபஹர் ஃப்ரீ சோன் (ஐபிஜிசிஎஃப்இசட்) மூலம் 2018 ஆம் ஆண்டு முதல் துறைமுகத்தை இயக்கி வருகிறது. 13 மே 2024 அன்று, ஐபிஜிஎல் போர்ட்ஸ் அண்ட் மரைடைம் ஆர்கனைசேஷன் ஆஃப் தி இஸ்லாமிக் டெர்மினிட் ஆஃப் தி இஸ்லாமிக் டெர்மினிட் ஆஃப் தி இரான் போர்ட்ஸ் அன்ட் மரைடைம் ஆர்கனைசேஷன் ஆஃப் தி இஸ்லாமிக் ரிபப்ளிக் ஆஃப் தி போர்ட்ஸ் அன்ட் மேரிடைம் ஆர்கனைசேஷன் உடன் கையொப்பமிட்டது. சபஹர் துறைமுகம். ஒப்பந்தத்தின் விதிகளி ன்படி, துறைமுக உபகரணங்களை வாங்குவதற்காக 120 மில்லியன் அமெரிக்க டாலர்களை இந்தியா நிறைவேற்றியு ள்ளது.

ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25% வரி விதிப்பது ஈரானுடனான இந்தியாவின் வர்த்தக சமன்பாடு பாதிப்பு குறித்து எந்த தகவலும் இல்லை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

"தமிழ்நாடு தலைகுனியாது"

# விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி தொகுதியில் பரப்புரை!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

விழுப்புரம்,பிப்.13-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, இன்று (13.2.2026 - வெள்ளிக்கிழமை) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி. ஆகியோர் விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நடை பெறும் பல்வேறு பரப்புரை நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

அதன் விபரம் வருமாறு:


கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இன்று (13.02.26 வெள்ளிக்கிழமை) "தமிழ்நாடு தலைகுனியாது" என்ற பரப்புரை நிகழ்ச்சி விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நடைபெறுகிறது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கழக விளை யாட்டு மேம் பாட்டு அணியின் செயலாளரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன், எம்.பி ஆகியோர் இதில் பங்கேற்கவிருக்கின்றனர். முதல் நிகழ்ச்சியாக விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் உள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள், ஆசிரியர் பெரு மக்கள், தொழில் முனைவோர், தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டோர் பங்கேற்கும் கலந்தாய்வுக் கூட்டமும், பின்னர் கழகத்தின் மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லத்தில் சந்தித்து உரையாடுதல் நிகழ்ச்சி யும், மாலையில் திருவண்ணா மலை சாலை, கலைஞர் திடலில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், செஞ்சி சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மஸ்தான் செய்து வருகின்றார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என். ஜெயக்குமார்

**பிப்ரவரி 13 (2024)**



**கழகம் துவக்கப்பட்ட போது, தலைமைக் கழக அலுவலகமாக செயல்பட்டு வந்த இராயபுரம், "அறிவகத்தில்" 1970ஆம் ஆண்டு முதல் பணியாற்ற தொடங்கி, சற்றேறக்குறைய 54 ஆண்டு காலமாக, தலைமைக் கழகத்தில் பணியாற்றியவர்.**

**கழகத் தலைவர்களான முத்தமிழறிஞர் கலைஞர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஆகிய இருபெரும் தலைவர்களின் அன்பை பெற்றதுடன், அவர்கள் எண்ண ஓட்டமறிந்து, அதனை உடனே செயல்படுத்தி வந்தவர்.**

**கிளை முதல் மாவட்ட அமைப்பு வரையிலான அனைத்து அமைப்புகளின் பெயர், அதன் நிர்வாகிகள் பெயர் என அனைத்து விவரங்களையும் கணினி போல தன் மனதில் பதிந்து வைத்து, அதனை தலைவர் கேட்கும்போது உடனடியாக சொல்லக் கூடிய ஆற்றல் பெற்றதுடன், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து கழக நிர்வாகிகள், முன்னோடிகளின் வரலாற்றை அறிந்து வைத்திருந்தவர்.**

**கழகத் தலைவர் அவர்கள் "தலைமைக் கழகத்தை நாடி வந்த ஒவ்வொரு உடன்பிறப்பும் அன்போடும் உரிமையோடும் உறவாடி 'அறிவாலயம் ஜெயக்குமார்' எனப் பெயரிட்டனர். உடன்பிறப்பு என்ற சொல்லுக்கேற்ப உடன்பிறப்பாய் துணை நின்ற அறிவாலயம் ஜெயக்குமார் அவர்களை வழியனுப்பும் துயர நிலைக்கு இன்று ஆளாகிவிட்ட கொடுமையும் வந்து சேர்ந்துவிட்டது. கலங்கி நிற்கும் உங்கள் அனைவருக்கும் ஆறுதல் சொல்லித் தேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறேன்." என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

தென்காசி வடக்கு மாவட்டம் – சங்கரன்கோவிலில்

# "தமிழ்நாடுதலைகுனியாது"கருத்தரங்கம்-ஏ.கே.எஸ்.விஜயன்சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமை!

தென்காசி, பிப். 13 –

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவிலில் ராஜபாளையம் சாலையில் உள்ள ஸ்ரீ சீதாலட்சுமி திருமண மஹாலில் "தமிழ்நாடு தலை குனியாது கருத்தரங்கம் நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் சங்கரன் கோவில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பி.எம்.ராமஜெயம் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக விவசாய அணி செயலாளர் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் பங்கேற்று பேசியதாவது:

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் எல்லார்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற முனைப்பில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்கள். விவசாயிகளுக்கு மற்றும் நெசவாளர்களுக்கு இலவச மின்சார திட்டம் கழகத்தால் கொண்டுவரப்பட்டது.

அதனை சீர்குலைக்கும் வகையில் ஒன்றிய அரசின் முந்தைய மின் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது ஜெயலலிதாவுக்கு அடுத்ததாக வந்த எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் தேடப்பட்டது விவசாயிகள் பயன்படுத்தி வந்த இலவச மின்சார த்தைக் கூட கணக்கிட்டு கருவி மாட்டக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் தான்.

திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் அவர்கள் மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்தும், திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப் பட்டுள்ளன. மேலும் விசைத்தறி உரிமையாளர் சங்கத்தினர் முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்த ஏழு கோரிக்கைகளில் ஆறு கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது தற்போது அனைத்து தரப்பினர் அழைத்துள்ள கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும். என்று கூறினார்.


நிகழ்வில் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கம்,தொழிலாளர்கள் சங்கம், விவசாயிகள் சங்கம்,விஸ்வகர்மா சமுதாய சங்கம்,வர்த்தக சங்கம்,ஆட்டோ ஓட்டுனர் சங்கம், முடிதிருத்துவோர் நல சங்கம்,முன்னாள் அரசு ஊழியர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாச்சியார்கோவில் தி. இராமலிங்கம்

**பிப்ரவரி 13 (2009)**



**பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சினாலும் – கொள்கையினாலும் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்க காலத்திலே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், தொடர்ந்து 48 ஆண்டுகளாக நாச்சியார்கோவில் கிளைக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**மன்னை நாராயணசாமி, கே.கே.நீலமேகம் மற்றும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக,நெருக்கடிகாலத்தில் மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**